Ts12T

**தென்காசி மாவட்டம்**

**இரண்டாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2024**

26-11-2024

**வகுப்பு 12**

**பொதுத் தமிழ்**

கால அளவு: 1.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 45

**பகுதி - I**

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 9×1=9**

1) ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
அ) சிவஞான முனிவர் ஆ) மயிலை நாதர்
இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம் பூரணர்

2) வேறுபட்டதைக் குறிப்பிடுக
அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்க் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

3) பொருத்துக
அ) ஆமந்திரிகை - 1) பட்டத்துயானை
ஆ) அரசுஉலா - 2) மூங்கில்
இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம்
ஈ) கழை - 4) எடை அளவு
அ) 3 1 4 2 ஆ) 1 2 3 4 இ) 4 2 1 3 ஈ) 4 3 2 1

4) திண்ணியர் என்பதன் பொருள்
அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர்
இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

5) எளியது, அரியது என்பன
அ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை
ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது
இ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு
ஈ) மெய்ப்பொருள் காண்பது - உருவு கண்டு எள்ளாதது

6) 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு.அழகிரி சாமி ஆ) புதுமைப்பித்தன்
இ) ஜெய மோகன் ஈ) எல். இராமகிருஷ்ணன்

7) 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' விழித்திருந்த வரும் அவரைப் பாடிய வரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்
ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்
ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

8) யானை புக்க புலம் போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்
அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது, பிறக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்குப் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

9) பண்புக் குறியீடுகளைக் கதைமாந்தகளோடு பொருத்துக
அ) அறம் - 1. கர்ணன்
ஆ) வலிமை - 2. மனுநீதிச் சோழன்
இ) நீதி - 3. பீமன்
ஈ) வள்ளல் - 4. தருமன்
அ) 3 2 1 4 ஆ) 4 3 2 1 இ) 2 4 3 1 ஈ) 4 3 1 2

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - II

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** **4×2=8**

10) ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?

11) பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக

12) நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?

13) மனத்தை அதன் போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவர் கூறுவது ஏன்?

14) ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக

15) எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

## பகுதி - III

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** **4×4=16**

16) நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

17) ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.

18) மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.

19) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

20) வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

21) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

சிவக்குமார்.மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப
வல்லம்-627809.
தென்காசி மாவட்டம்.

## பகுதி - IV

**IV. எவையேனும் ஒன்றனுக்கும் மட்டும் தருக.** **1×6=6**

22) அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

ஆ) மகா நடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி - V

**V. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4+2=6**

23) அ) 'குழல்வழி' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'அரண்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

- - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com